கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம்
සමූපකාර සංවර්ධන දෙපාර්තමේන්තුව උතුරු පළාත
DEPARTMENT OF CO-OPERATIVE DEVELOPMENT, NORTHERN PROVINCE
Kanniya Road,Varothaya Nagar, Trincomalee

Our Ref:- NP/15/GEN/08 Your Ref:- 04.12.2008

**சுற்றறிக்கை இல:- 07/2008**

சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களுக்கும்

## CO-OP City சிறப்பு விற்பனை நிலைய செயற்பாடு

தங்கள் பிரிவில் செயற்பட்டுவரும் CO-OP City சிறப்பு விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக பின்வரும் விடயங்களை கவனத்திற் கொண்டு செயற்படுவதுடன் வேண்டிய அறிவுறுத்தல்களை சகல ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

1. CO-OP City சிறப்பு விற்பனை நிலையங்கள் பிரதேசத்தில் விற்பனை செய்யக்கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான திட்டங்களைத்தயாரித்து செயற்படுவதன் மூலம் இந்நிலையங்களின் இலாப மீட்டுந்திறனை அதிகரிக்கமுடியும்

2. உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கும் பொருட்டு உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

3. கொள்வனவு கொள்கையை திட்டமிடும்போது பொருட்களின் விற்பனை விலை சந்தைவிலைக்கு மேற்படாதவகையிலும் மொத்த இலாப வீதம் 10% அளவில் இருக்கத்தக்கதாகவும் கொள்வனவுக் கொள்கையை திட்டமிடுதல் அவசியமானதாகும்

4. இந்நிலையங்களுக்கான மின்சாரம், தொலைபேசி, ஏனைய செலவுகள் ஆகியன தொடர்பில் கட்டுப்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. நட்டத்தில் இயங்கும் சிறப்பு விற்பனை நிலையங்கள் தொடர்பில் வேண்டிய ஆலோசனைகளை வழங்கி வழிகாட்ட வேண்டியதும், கண்காணிக்க வேண்டியதும் தங்களின் பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

6. சிறப்பு விற்பனை நிலையங்களின் முன்னேற்றம் தொடர்பான ஆலோசனைகளை சங்கத்திற்கு பொறுப்பான கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக வழங்கப்படுவதுடன் எதிர்வரும் காலங்களில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் செயற்றிறன் மதிப்பீடு இவற்றையும் உள்ளடங்கியதாக சமர்ப்பிக்கப்படுதலை தாங்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

7. இச்சிறப்பு விற்பனை நிலையங்களின் செயற்பாடுகள், முன்னேற்றம் தொடர்பில் கணக்காய்வாளரும் தனது கணக்காய்வு அறிக்கையில் விபரமாக குறிப்பிட்டு காட்டுதல் வேண்டும்.

8. இச்சிறப்பு விற்பனை நிலையங்கள் தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருப்பதை அனுமதிக்கமுடியாது. நட்டத்திற்கான காரணங்களாக திட்டமிடப்பட்ட கொள்வனவு

☎-CCD & RCS – 060 2264646 Gen – 060 2264645 Fax – 026 2226951/4/6/7 – Ext - 244
E- mail :- ccdnp@mail.com

கொள்கையின்மையும், தேவையற்ற மூலதன முடக்கமும் உள்ளதென என்னால் கண்டறியப்பட்டுள்ளது.எனவே இலாபத்தில் இயங்கவைக்க வேண்டிய ஆலோசனைகளை வழங்கும் பொறுப்பு திணைக்களத்திற்கு உண்டு என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

9. ஒவ்வொரு CO-OP City விற்பனை நிலையங்களினதும் முன்னேற்ற அறிக்கைகளை ஆராய்ந்து அவை பற்றிய விமர்சன அறிக்கை தனித்தனியாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும் நட்டங்கள் ஏற்பட்டிருப்பின் அதற்கான காரணங்களை ஆராய்ந்து, அந்நட்டங்களை சீர்செய்வதற்கான மாற்று நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் அறிக்கையில் இடம் பெறல் வேண்டும்.

O/C ஆ.சுப்பிரமணியசர்மா,
கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்(வமா)

பிரதி : செயலாளர், மாகாண உள்ளூராட்சி, நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு, கூட்டுறவு, கிராம அபிவிருத்தி, கைத்தொழில் அமைச்சு. வட மாகாணம் - தகவலுக்காக